இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 307 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 02 – சனிக்கிழமை 17 ஜூன் 2023 – திருச்சி★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 307 : Thiruvalluvar Year - 2054 - Aani 02 - Saturday 17 June 2023 - Trichy★★ 12 Pages ₹ 5.00

### விசாரணை அமைப்புகளை வைத்துச் செய்யும் உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படுபவர்கள் அல்ல நாங்கள்:

# அறிவிக்கப்படாத எமர்ஜென்சியா நிலவுகிறது?

## பா.ஜ.க. அரசின் அரசியல் பழிவாங்கும் செயலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஜூன் 17-**

**தி.மு.க.காரர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம். எங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும். உருட்டல், மிரட்டல்களுக்கு எல்லாம் பயப்படுபவர்கள் இல்லை தி.மு.க. காரர்கள்! இங்கே அறிவிக்கப்படாத எமர்ஜென்சியா நிலவுகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் செயலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.06.2023) தமது சமூக வலைதளப் பக்கங்களில் வெளியிட்டுள்ள காணொளிப் பதிவின் விவரம் வருமாறு:-

எல்லாருக்கும் வணக்கம்!

வழக்கமாக நான் ‘உங்களில் ஒருவன் பதில்கள்’ மூலமாக உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால், இப்போது இந்த வீடியோ மூலமாக இன்னொரு முக்கியமான விஷயம் பற்றிப் பேசப் போகிறேன்.

**செந்தில் பாலாஜி உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் செயல்பட்ட அமலாக்கத்துறை!**

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அமலாக்கத்துறை மூலமாக கொடுக்கப்படுகிற அநியாயமான தொல்லைகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். இது அப்பட்டமான அரசியல் பழிவாங்கும்



செயல் என்பதில் யாருக்கும் கொஞ்சமும் சந்தேகமில்லை!

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள பழைய புகாரை வைத்து, 18 மணி நேரம் அடைத்து வைத்து, மன அழுத்தம் கொடுத்து, மனரீதியாகவும் – உடல் ரீதியாகவும் பலவீனப்படுத்தி, உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் இதயநோயை உருவாக்கி இருக்கிறார்கள் என்றால், இதைவிட அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் இருக்க முடியுமா?

செந்தில் பாலாஜி மேல் புகார் இருக்கும் என்றால், அது தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்பு இருக்கும் என்றால், அவரை அழைத்து விசாரணை நடத்துவதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஓடி ஒளியக் கூடிய அளவுக்கு அவர் சாதாரணமானவர் இல்லை! அவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர். அதுவும் 5 முறை சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

**அமலாக்கத்துறை மூலம் அரசியல் செய்கிறது பா.ஜ.க.!**

அதுவும் இரண்டாவது முறையாக அமைச்சராக இருக்கிறார். நாள்தோறும் பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்.

### பா.ஜ.க.வின் காலடியில் கிடக்கும் - பாதம் தாங்கி பழனிசாமி செந்தில் பாலாஜி பற்றி குறை கூறத் தகுதி உண்டா?

அப்படிப்பட்டவரை, ஏதோ தீவிரவாதியைப் போல அடைத்து வைத்து விசாரிக்க என்ன அவசியம் இருக்கிறது?

அமலாக்கத்துறை அதிகாரிகள் வந்த போது, முழு ஒத்துழைப்பு தந்தார். எந்த ஆவணங்களை எடுத்திருந்தாலும், அது தொடர்பாக விளக்கமளிக்கத் தயார் என்று சொல்லி இருந்தார். அதற்குப் பிறகும் 18 மணி நேரமாக அடைத்து வைத்துள்ளனர். யாரையும் சந்திக்க அனுமதி இல்லை. இறுதியாக அவருக்கு உடல்நலம் முழுமையாக பாதிக்கப்பட்டு இதயவலி அதிகமான பின்னர்தான், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அதிலும் அலட்சியம் காட்டி இருந்தார்கள் என்றால், அது அவருடைய உயிருக்கே ஆபத்தாகி இருக்கும்! இப்படி ஒரு விசாரணையை மேற்கொள்ளும் அளவுக்கு அப்படி என்ன அவசரம்? அறிவிக்கப்படாத எமர்ஜென்சியில் நாடு இருக்கிறதா? அப்படித்தான் இருக்கிறது, அமலாக்கத் துறையின் நடவடிக்கை.

எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், பா.ஜ.க. தலைமை, அமலாக்கத்துறை மூலமாக அவர்களது அரசியலைச் செய்ய நினைக்கிறது. மக்களைச் சந்தித்து அரசியல் செய்ய பா.ஜ.க. தயாராக இல்லை. பா.ஜ.க.வை நம்ப மக்களும் தயாராக இல்லை. மக்களுக்கான அரசியலை செய்தால்தான் மக்கள் பா.ஜ.க.வை நம்புவார்கள். பா.ஜ.க.வின் அரசியலே மக்கள் விரோத அரசியல் தான்!

**ஜனநாயக விரோத பாணியை தொடர்ந்து பின்பற்றும் பா.ஜ.க.!**

கருத்தியல் ரீதியாக, அரசியல்ரீதியாக, தேர்தல் களத்தில் எதிர்கொள்ள முடியாதவர்களை வருமானவரித் துறை, அமலாக்கத்துறை, சி.பி.ஐ. என விசாரணை அமைப்புகளை வைத்து மிரட்டுவது பா.ஜ.க.வின் பாணி! அதுதான் அவர்களுக்குத் தெரிந்த ஒரே பாணி! இந்த ஜனநாயக விரோத பாணியைத்தான் இந்தியா முழுமைக்கும் அவர்கள் பின்பற்றி வருகின்றனர். ஒரே ஸ்கிரிப்ட்டைத்தான் வேறு வேறு மாநிலங்களில் டப்பிங் செய்து வருகிறார்கள்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

---

### அமைச்சரின் இலாகாவை முதல்வர் ஏன் மாற்றுகிறார் என்று கேட்க

# ஆளுநருக்கு சட்டப்படி உரிமை இல்லை!

## அற்பத்தனமான அரசியல் செய்யும் ஆளுநருக்கு அமைச்சர் க.பொன்முடி கடும் கண்டனம்!

**சென்னை, ஜூன் 17-**

**அமைச்சரின் இலாகாவை முதல்வர் ஏன் மாற்றுகிறார் என்று கேட்க ஆளுநருக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றும், தமிழ்நாடு ஆளுநர் அற்பத்தனமான அரசியல் செய்கிறார் என்று அமைச்சர் க.பொன்முடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் க.பொன்முடி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களை நீக்க வேண்டும் என ஆளுநர் அவர்கள் 31.5.2023 அன்று ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்ற அடுத்த நாளே முதலமைச்சர் 1.6.2023 அன்று ஆளுநர் அவர்களுக்கு இது குறித்த தெளிவான சட்ட ரீதியான காரணங்களை விளக்கிக் கூறி பதில் கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கடிதத்தில்,

ஆளுநரின் கடிதம் அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்பதை சுட்டிக்காட்டியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சருக்குத்தான் அமைச்சரை நீக்கவோ, நியமிக்கவோ பரிந்துரை செய்யும் அதிகாரம் இருக்கிறது என்பதையும் இதுகுறித்து பரிந்துரைகளை அளிக்கும் ஆளுநருக்கு அரசியல் சாசனத்தின்படி எவ்வித அதிகாரமும் இல்லை என்பதையும் தெளிவாக அரசியல் சட்டப்பிரிவு 164(1) ஐ மேற்



கோள் காட்டி எழுதியிருக்கிறார்.

**அமித்ஷா மீது வழக்கு இருந்த போது எப்படி பதவியில் நீடித்தார்?**

மேலும் அக்கடிதத்தில் ஒரு மாநில அமைச்சரவையில் யார் அமைச்சராக இருக்க வேண்டும், இருக்கக் கூடாது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் ஆளுநருக்கு அடிப்படை அரசியல் பாடமே எடுத்திருக்கிறார். இன்னும் சொல்வதென்றால் தற்போதைய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் குஜராத் உள்துறை அமைச்சராக இருந்த போது, வழக்குகள் விசாரணையில் இருந்த நிலையில் எப்படி பதவியில் தொடர்ந்தார் என்பதைக் கூட உதாரணமாக சுட்டிக்காட்டியிருந்தார்.

அக்கடிதத்திலேயே அமைச்சர் செந்தில்பாலாஜி விஷயத்தில் கடிதம் எழுதும் ஆளுநர், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது ஊழல் வழக்குத் தொடர கோரப்பட்ட அனுமதியை அளிக்காமல் ஏன் கோப்புகளை கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார் என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு எல்லாம் எந்த பதிலையும் கூற ஆளுநருக்கு திராணி இல்லை போலும். அதை ஏனோ மறந்துவிட்டு முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய 1.6.2023 நாளிட்ட பதில் கடிதத்தினை வசதியாக மறைத்து விட்டு, தான் முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தை மட்டும் லீக் செய்திருப்பது அற்பத்தனமான அரசியல் என்றே கருத வேண்டியதிருக்கிறது.

அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அரசுப் பணிகள் தொடர்ந்து தொய்வின்றி நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைச்சர் செந்தில்பாலாஜி கவனித்து வந்த பொறுப்புகளை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு மற்றும் முத்துச்சாமி ஆகியோருக்கு மாற்றி வழங்கப் பரிந்துரைத்து முதலமைச்சர் அவர்கள் இன்று மதியம் கடிதம் எழுதியிருந்தார்கள்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி அமைச்சர்களின் பொறுப்புகளை மாற்றி அமைக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள நிலையில், அமலாக்கத்துறை தேவையற்ற வகையில் அமைச்சர் செந்தில் பாலாஜி குறித்து விசாரித்து வருவதை சுட்டிக்காட்டி சரியான காரணத்தை மேற்கோள் காட்டி கடிதம் அனுப்புமாறு ஆளுநர் கேட்டிருக்கிறார்.

இது மாநில அரசின் நிர்வாகத்தில் ஆளுநர் தலையிடுவதாகவும் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதாகவும் நாங்கள் பார்க்கிறோம்.

எப்படி அமைச்சர்களை நியமிப்பதிலும், நீக்குவதிலும் முதலமைச்சரின் பரிந்துரைப்படி ஆளுநர் செயல்பட வேண்டுமோ அதே போல்தான் இலாகா மாற்றுவதிலும் செயல்பட வேண்டும். ஒரு அமைச்சரின் இலாகாவை ஏன் முதலமைச்சர் மாற்றுகிறார் என்று காரணம் கேட்க ஆளுநருக்கு அதிகாரமும் இல்லை. அரசியல் சட்டப்படி உரிமையும் இல்லை. மேலும் அமைச்சர் ஒருவர் விசாரணையைச் சந்திப்பது அவரது அமைச்சர் பொறுப்புக்கான தகுதியை எந்த வகையிலும் பாதிக்காது என்ற நிலையில், அதனை ஆளுநர் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பது தேவையற்றது.

இவற்றைக் கருத்தில் கொண்டு, ஆளுநரின் கடிதத்திற்கு உடனடியாக இன்று பதில் அனுப்பி வைக்கப்படுகிறது. அதில் அவரின் முந்தைய கடிதத்திற்கு பதில் அளிக்கப்பட்ட விவரத்தையும், இன்றைய கடிதத்திற்கு தெளிவான சட்ட விவரங்களையும் எடுத்துக் கூறி, தான் ஏற்கனவே அளித்த பரிந்துரையை ஏற்று அதற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

அரசியல் சட்டப்படி பதவிப் பிரமாணம் செய்துகொண்டு அரசியல் சட்டத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டிய ஆளுநர், இப்படி அரசியல் சட்டத்திற்கு விசுவாசமாக இல்லாமல் இருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்கு இழுக்கு ஏற்படுத்தும் நடவடிக்கையை தொடர்ந்து ஆளுநர் அவர்கள் மேற்கொள்வது வேதனைக்குரியது. கண்டனத்திற்குரியது.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி அவர்கள் கூறியுள்ளார்.

---

### அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு

## காவேரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கலாம்!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

**சென்னை, ஜூன் 17–**

**அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு காவேரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கலாம் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:

(GFX IN) அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜி ஓமந்தூரார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். 3 முக்கிய ரத்தக் குழாயில் அடைப்பு இருப்பதால் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இந்த பரிந்துரையை ஒன்றிய அரசின் இ.எஸ்.ஐ. மருத்துவமனை மருத்துவர்களும் உறுதி செய்தனர்.

அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்ட விதம் சட்டவிரோதமானது எனக் கூறி, அவரது மனைவி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதிகள் நிஷா பானு, பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.



விசாரணையின் போது வழக்கின் பின்னணி, கைதுக்கான காரணம், கைது நேரம் உள்ளிட்டவை குறித்து நீதிபதிகள் சரமாரியாக கேள்விகளை எழுப்பினர். இருதரப்பு வாதங்களும் நிறைவு பெற்ற நிலையில், நேற்று முன்தினம் தீர்ப்பளித்த நீதிபதிகள், மனுதாரரின் கோரிக்கையை ஏற்று, சென்னையில் உள்ள காவேரி மருத்துவமனையில் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட்டனர்.

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அளிக்க வேண்டிய சிகிச்சை குறித்து மருத்துவர்கள் அளித்துள்ள பரிந்துரையை சந்தேகிக்க முடியாது என்றும் நீதிபதிகள் தங்களது உத்தரவில் தெரிவித்துள்ளனர். மேலும், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அளிக்கப்படும் சிகிச்சையை அமலாக்க பிரிவு நியமிக்கும் மருத்துவர்கள் குழுவும் ஆய்வு செய்யலாம் என்றும் தெரிவித்தனர்.

**காவேரி மருத்துவனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்!**

இந்நிலையில் நீதிமன்ற உத்தரவுப்படி ஓமந்தூரார் மருத்துவமனையிலிருந்து காவேரி மருத்துவமனைக்கு செந்தில் பாலாஜி மாற்றப்பட்டார். மருத்துவ பரிசோதனைக்கு பிறகு அறுவை சிகிச்சை தேதி குறித்து முடிவு செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. காவேரி மருத்துவமனையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.